REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 20உ வெள்ளி (3—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 21உ சனி (4—6—55) [இதழ் 30]

88லட்சம் பேருக்கு வேலை

திட்டம் தயாராகிறதாம்!

பம்பாய், ஜூன், 2—

அகில இந்திய கதர், கிராமத் தொழில் 'போர்டு', இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக, சுமார் 142·76 கோடி ரூபாய் செலவில் 88 லட்சம் பேருக்கு முழு நேர வேலையும், 80,000 பேருக்கு பாதி நேர வேலையும் தரக் கூடிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கொடுமைக் குன்றேறும் கொத்தலாவலை!

சிங்களவரையே வேலைக்கு வைக்க வேண்டுமாம்!

இலங்கை வர்த்தகர்களுக்கு நிபந்தனை?

கொழும்பு, ஜூன் 2—

இலங்கையில் ஏற்றுமதி—இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள், இனி வர்த்தக அனுமதி பெறவேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சிங்களவரையே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

எந்த அளவு வேலைக்கு, சிங்களவரைத்தான் கட்டாயமாக வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் திட்டம் சீக்கிரமே வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

மாதம் ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்குவோரில் 50 சதவிகிதத்தினரும், ரூ. 500-க்கும் குறைவாக சம்பளம் வாங்கும் ஊழியரில் 75 சதவிகிதத்தினரும் கட்டாயமாக சிங்களவரே அமர்த்தப்பட வேண்டுமென்று வர்த்தகர்கள் கோரப்படுவார்கள் என, நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றனவாம்.

மேலும் வர்த்தக நிர்வாகம், மேற்பார்வை முதலியனவற்றைக் கவனிப்போரும்சிங்களவரே அமர்த்தப்பட வேண்டியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

'வெள்ளையருக்கு எதிராக புரட்சி செய்க'

இந்திய மன்னர்களுக்கு ஜெர்மன் கெய்சர் எழுதிய கடிதம்

புதுடில்லி, ஜூன் 3—

ஜெர்மன் நாட்டு கெய்சரும், துருக்கி சுல்தானும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து புரட்சியில் ஈடுபடுமாறு கோரி இந்திய மன்னர்களுக்கு எழுதிய கடிதம், 'சுதந்திர இயக்க வரலாறு' எழுதும் ஆசிரியர்கள் வசம் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கையெழுத்திட்ட அக்கடிதங்களின் நகல், இந்திய மன்னர்கள் வசம் சேரவே இல்லை என்றும், அப்போதிருந்த வெள்ளையர் ஆட்சி அக்கடிதங்களைப் பறிமுதல் செய்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தால் உதவி தருவதாக வாக்களித்து கெய்சர், நேபாள மன்னருக்கு எழுதிய கடிதம், மன்னர் கைக்கு எட்டியதாகவும், ஆனால், அதற்கு மன்னர் பதிலேதும் அனுப்பவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

ஐரோப்பாவில் காதர் கட்சியின் பெர்லின் குழு, தீவிரமாக வேலை செய்துகொண்டிருந்த போது, 1914—17-ம் ஆண்டுகளில், அக்கடிதங்கள் எழுதப்பட்டன என்று சொல்லப்படுகின்றது.

இந்த முக்கியமான கடிதங்களின் கையெழுத்திடப்பட்ட நகல்கள் இந்தியாவிற்கு வெளியிலிருந்து கொண்டு வெள்ளையராட்சிக்கு எதிராக சுதந்திர இயக்கம் ஒன்றைத் தீவிரமாக நடத்திவந்த ராஜா மகேந்திர பிரதாப் என்பவரிடம் இருந்தது என்றும், அவற்றை அவர் பாதுகாப்பிற்காக தனது ஜப்பானிய நண்பர் ஒருவரிடம் தந்திருந்ததாகவும், இரண்டாம் யுத்தத்தின்போது, ஜப்பானிய நகரங்களில் வீசப்பட்ட குண்டுகளினால் அது, அழிந்துபட்டிருக்கலாம் என யூகிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தகவல்களை வரலாற்று ஆசிரியர் குழு செயலாளரான எஸ். எம். கோஷ் என்ற மக்கள் சபை உறுப்பினர் வெளியிட்டிருக்கிறாராம்.

சிவாஜிக்கு நினைவுச்சின்னம்

மகாராஷ்டிர மாவீரன் சிவாஜிக்கு, சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரதாப் கோட்டையில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்படுமெனத் தெரிகிறது. இதற்கு ரூ 1 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

சமீபகாலமாக, 'காப்பு' வரிக் குழுவின் தலைவராக இருந்தவரும், ஐ சி. எஸ். அதிகாரியுமான மதுசூதன் தாமோதர் பட் என்பவர், சினிமா தணிக்கை போர்டின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1,853 அகாலிகள் கைது!

தனி மாநிலக் கிளர்ச்சியின் எதிரொலி

சாந்திகர், ஜூன் 3—

மொழிவழியாக பாஞ்சாலம் அமைக்கக் கோரி, உரிமைக் குரலெழுப்பி, கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது சம்பந்தமாக இதுவரை 1,853 அகாலி தளத்தவர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

சிதம்பரத்தில் பொதுச் செயலாளர்

ஊர்வலமும், தோழர்கள் அணிவகுப்பும்

தமிழர் நல்வாழ்வு சிதைந்தது பற்றி விளக்கம்

28—5—55ல், சிதம்பரம் அஞ்சல் நிலையத்திலிருந்து தோழர் பொ. சொக்கலிங்கம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு மேலவீதி, தெற்கு வீதி, கீழவீதி, வ. உ. சி. தெரு ஆகிய இடங்கள் வழியாக டவுன் ஹால் மைதானத்தை வந்தடைந்தது. சைகிள்களில் கழகக் கொடிகளுடனும், பாண்டு வாத்தியங்களுடனும் ஆயிரக்கணக்கான தோழர்கள் அணிவகுத்து வந்தனர்.

ஏராளமான மலர்மாலைகள் ஊர்வலத்தில் பொதுச் செயலாளருக்குப் போடப்பட்டது.

கூட்டத்திற்கு தோழர் தில்லை-வில்லாளன் தலைமை வகித்தார்.

முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி அவர்கட்கு பாராட்டுரை வழங்கி நன்றி தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய, மாவட்ட செயலாளர் சாம்பசிவம் அவர்கட்கு வாழ்த்துரையும், கைத்தறி ஆடையும் வழங்கப்பட்டது.

தலைவர் முன்னுரைக்குப் பின், வட்டக் குழு செயலாளர் தோழர் பொ. சொக்கலிங்கம், பொதுச் செயலாளரை பாராட்டிப் பேசினார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், ஜாதி வெறியர்களின் கொடுமையையும் விளக்கிப் பேசினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஆற்றல் படையின் முன்னேற்றம்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பெருமிதம்

திண்டுக்கல்லில் வரவேற்பும் பொதுக்கூட்டமும்

"நாட்டில், நல்லதோர் பண்பும், செயலும், நன்மதிப்பும், கண்ணியமும், கட்டுப்பாடும் உடையதாக இயங்கும் பலம் பொருந்திய கட்சியாக தி. மு. கழகம் முன்னேறி வருகிறது. இளைஞர் அறிவுப் பட்டாளமும், ஆற்றல் பட்டாளமும் நம்மிடமிருக்கிறது.

"நாம் முன்னர் சொன்னவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளாத மாற்றுக் கட்சி நண்பர்களும், மடாதிபதிகளும், அரசாள்வோரும், இன்றைய நிலையில் அவைகளை ஏற்றுக்கொண்டு—நியாயமானவைகள் என்று ஒப்புக்கொள்ளும் அளவுக்கு நம் கொள்கைகள் அவ்வளவு நல்ல திட்டங்களாக மாறிவருகின்றன,"

—என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திண்டுக்கல்லில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விளக்கவுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

31—5—55 மாலை 3-45 மணிக்கு தி. மு க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை தோழர் எஸ் முத்து அவர்களுடன் திண்டுக்கல் வந்து சேர்ந்தார். தோழர் எஸ் இளங்கண்ணன் அவர்கள் தலைமையில், நகர முக்கிய நிர்வாகிகளும் பொதுமக்களும் ரயிலடியில் வரவேற்பளித்தனர்.

மாலை சுமார் 5 மணிக்கு பொதுச் செயலாளர் அவர்களுக்கும், தோழர் முத்து அவர்களுக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது பழனி ரோடில் தோழர் எஸ் முத்து அவர்களாலும், முத்து நகரில் பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்களாலும் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன.

மாலை 6-45 மணிக்கு நகர வ. உ. சி. திடலில், தோழர் க வே விக்கிரமாதித்தராசன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. சமதர்மம் எ. சி, என். முத்து, எஸ் முத்து ஆகியோர் பேசினர்.

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"கட்டாய இந்தியைப் புகுத்திய ஆச்சாரியாரே, 'கட்டாய இந்தி கூடாது' என்று பேசும் அளவுக்கு நம் கொள்கை வளர்ந்து வருகிறது.

"12½ லட்சம் மக்கள் தொகை கொண்ட லெபனான் ஒரு தனி நாடு; அதுபோன்று இலங்கை, செக்கோஸ்லாவேகியா, அர்ஜென்டைனா போன்ற நாடுகளும்—குறுகிய மக்கள் தொகை கொண்ட தனி நாடுகளாக—சுதந்திரமாக வாழுகின்றன.

"5,500 மக்கள் தொகையும், 1,000 பேர் கொண்ட நாடுகள் எல்லாவற்றையும் 'தனி நாடு' என்று ஒப்புக்கொண்டு வரவேற்புகள் கொடுக்கும் டில்லி பீடம், ஏனோ, 7½ கோடி மக்கள் தொகை கொண்ட திராவிட நாட்டை ஒரு தனி நாடாகப் பிரிப்பதற்கு ஒப்புக்கொள்ளாது பல பொறுப்பற்ற காரணங்களைச் சொல்லி மழுப்புகிறது!

"ஒன்றாயிருப்பதால், வடநாட்டில்தான் பல நல்ல திட்டங்கள் நிறைவேறுகின்றன — தென்னாட்டில் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறது.மத்திய சர்க்காருக்கு நாம் கொடுக்கும் வரி, வடநாட்டிலேதான் பயன்படுகிறது; எனவேதான், நாம் பிரிய வேண்டும் என்கிறோம். பிரிந்தால்தான் நாம் நல்ல வாழ்வு பெற முடியும்" என்று கூறிவிட்டு, அவைகளுக்கு ஆதாரபூர்வமான புள்ளிவிவரங்களைக் காண்பித்து, அதன் மூலம் 'மக்கள் நல்லதோர் அறிவு பெற்று, கூடிய விரைவில் திராவிட நாடு அடைய முயல வேண்டும்—அதற்காக மிகவும் பொறுப்புடன் பாடுபடும் நிறுவனம் தி. மு. கழகம் தான்' என்று குறிப்பிட்டு, தெளிவாகவும் விளக்கமாகவும் விரிவுரை ஆற்றினார்.

கையெழுத்திடுவது ஒத்திவைப்பா ?

ரஷியக் குழுத் தலைவர் குருஷ்சேவ்—யூகோ நாட்டு அதிபர் டிட்டோவுக்குமிடையே எதிர்பார்த்த நேரத்திற்கும் அதிகமாக பேச்சுவார்த்தை நடந்ததாகவும், கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது 1 மணி நேரம் ஒத்தி போடப்பட்டதென்றும் செய்திகள் கூறுகின்றன.

மாநில புனரமைப்பு குழுவின்முன் நேரு

புதுடில்லி, ஜூன் 2—

மாநில புனரமைப்புக் குழுவை பண்டித நேரு முதல் தடவையாகச் சந்தித்து, சுமார் 2 மணி நேரம் அதனிடம் கருத்தறிவித்தாராம். காங்கிரஸ் தலைவர் தேபரும், நிதி அமைச்சர் தேஷ்முக்கும்கூட, தங்கள் கருத்தைத் தெரிவித்தனராம்.

நம் நாடு

சென்னை 3—6—'55 வெள்ளி

உள்நாட்டு மருத்துவம்

சித்த மருத்துவம், ஆயுள்வேதம், யுனானி ஆகிய மூன்று முறைகளும் இந்தியத் துணைக் கண்டத்தின் உள்நாட்டு மருத்துவமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனைப் பாதுகாத்து வளர்ப்பதற்கென, சென்னை நகரில் ஒரு கல்லூரியும், காலஞ்சென்ற பானகல் அரசர் அவர்களால் துவங்கப்பட்டு நடைபெற்றும் வருகிறது.

அக் கல்லூரி நிறுவியவரின் பெருநோக்கத்தை, எந்த அளவு அக் கல்லூரியில் இதுவரை பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்றுள்ளவர்கள் நிறைவேற்றியுள்ளனர் என்பது எவராலும் புரிந்துகொள்ள முடியாத பெரும் புதிராகும். இத்துறையில், அக்கல்லூரியில் கற்றுத்தேறிய மாணவர்கள் செய்துள்ள சேவையின் தன்மை தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பது ஒரு பக்கம் இருக்க, துவக்கிய பானகல் அரசரின் உள்ளக்கிடக்கையை வெற்றி பெறச் செய்ய இத்துணை ஆண்டுக் காலமாக அரசாங்கம் மேற்கொண்ட ஆற்றல் மிக்கச் செயல்களும் மூடுமந்திரமாகவே இருந்து வருகின்றன.

சித்த மருத்துவத்தையோ, ஆயுள்வேதத்தையோ ஒருவர் கற்றுத் தேறுவது என்பது, மிக மிகச் சிரமமான காரியமாகும். அதற்கு இன்றியமையாத் தேவைகளாக உள்ள பாட நூற்கள், தெளிவான முறையில், இத்துணை ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் உருவாக்கப்படாமல்தான் இருந்து வருகின்றன. அதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி மிக மிகச் சொற்பம்; அல்லது ஒன்றுமே இல்லை என்றே கூற வேண்டியதாக இருக்கிறது.

பாட புத்தகங்கள் தெளிவான முறையில் ஆக்கப்படாத குறை ஒரு பக்கம் இருக்க, ஆங்கில மருத்துவத்தை படித்துத் தேறுவதில் மாணவர்களுக்குள்ள ஆர்வம், உள்நாட்டு மருத்துவத்தைப் படித்துப் பட்டம் பெறுவதில் அறவே கிடையாது.

ஆங்கில மருத்துவர்கள் அதிகமாக மதிக்கப்படுகிறார்கள் அதிகமாகப் பொருளீட்டும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. அந்த இரண்டும் நாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கு இருப்பது கிடையாது. அதனால்தான் நாட்டு மருத்துவத்தைக் கற்க மாணவர்கள் தயங்குகிறார்கள் எனக் காரணம் கூறவும் கூறுகிறார்கள். இந்தக் காரணம் முழு உண்மையைக் கொண்டுள்ளதென ஒப்புவதற்கில்லை.

மேற்கூறிய குறைபாட்டினை அரசாங்கமும், மாணவர்களும் இணைந்து முயற்சித்தால், ஒரு நொடிப்பொழுதில் களைந்துவிட முடியும். காலப்போக்கில், மக்களுடைய மனப் போக்கில் ஏற்பட வேண்டிய மாற்றத்தையும் செய்துவிடுவது சாத்தியமாகும்.

கலுவமும் கையுமாகக் காலம் முழுதும் செலவழிப்பதும், எரி நெருப்பின் அருகில் எப்பொழுதும இருந்து வருவதும், உள்நாட்டு மருத்துவத்தில் இணைந்துள்ள பெருந்தேவையாகும். இந்தத் தேவை, ஆங்கில மருத்துவம் போன்று மாணவர்களைக் கவரக்கூடியதல்ல.

மேற்குறிப்பிட்ட முக்கியத் தேவையாக உள்ள கடும் உழைப்பை உள்நாட்டு மருத்துவத்திலிருந்து துண்டிப்பதில் ஏற்படக்கூடிய வெற்றியைப் பொறுத்துத்தான், உள்நாட்டு மருத்துவத்தில் தேர்ச்சியுற நமது இளைஞர்கள் முன்வருவதும் தயக்கங் காட்டுவதும் இருக்கிறது.

மற்றத் துறைகள் அனைத்திலும் ஆரிய—திராவிட பிணக்கு இருந்து வருவது போன்றே, மருத்துவத் துறையிலும் இருந்தே வருகிறது.

ஆரிய வழி வந்தது ஆயுள்வேதம். இதை மறுப்பதற்கு மில்லை—மறந்து விடுவதற்கு மில்லை.

மறுக்க முடியாததற்கு இருக்கும் ஏடுகள் சான்று—மறந்துவிட முடியாமைக்கு ஆயுள்வேத பண்டிதர்கள் காட்டி வரும் மனப் போக்கே சான்று!

சித்த மருத்துவம் மிக மிகச் சிறப்புடையது—பல ஆண்டுக் காலத்துக்கு முன்னதாகவே செம்மைபடுத்தப் பட்டுள்ளது ஆகும். அது, தமிழர்களுடையது—திராவிடர்களின் தனிப் பெரும் சொத்து. பற்பம் - செந்தூரம் - சுண்ணம் - சித்த மருத்துவத்தின் சிகரம்.

உயிர் குடிக்கும் கொடிய நஞ்சுகள், கடும் பிணி தீர்க்கும் மாமருந்துகளாக முடிக்கப்பட்டுள்ளன, தமிழ்ப் பெருங்குடி மக்களால். இன்றல்ல, நேற்றல்ல, பல நூறு ஆண்டுக் காலத்துக்கு முன்பே இந்த ஏற்பாட்டில் சிறப்பெய்தினர் திராவிட மக்கள்.

இரும்பு—பொன் உலோக இனங்களையும், செந்தூரமாக்கினர்; வெண்சாம்பலாக்கினர்; வேகம் கூடிய சுண்ணம்பு ஆக்கினர்; திராவிட நல்லறிவாளர்கள்.

அரிஷ்டம், ஆயுள்வேதத்தின் சிறப்பு! அது வேறு ஒன்றுமில்லை — வெறும் சாராயம்!

பட்டைத் தூள் — சூரணம் —சாராயத்திற்கு அடுத்தக் கட்டத்தில் இருப்பது ஆயுள்வேதத்தில், இது!

சித்த மருத்துவச் செந்தூரமும், பற்பமும், காலம் கூடக் கூட, மருந்தின் ஆற்றல் மிகுந்து காணும். ஆனால் சூரணம் — பட்டைத் தூளோ ஆறு திங்கள் அல்லது ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாக, இயல்பிழந்து வெறும் குப்பையாகிவிடும்!

சித்தமருத்துவம் உயிர்ப்பிக்கும் பணியை, பெருங்கல்லூரிகளால் ஒருக்காலும் நிறைவேற்ற முடியாது. அதற்குரியது கிராமக் கல்லூரிகளேயாகும்.

ஆங்கில மருத்துவ நூற்களை அடிப்படையாகக் கொண்டு, சித்தமருத்துவ பாட நூற்களும் ஆக்கப்பட வேண்டும்.

அதற்குரிய, திறம்படைத்த சித்த மருத்துவர்களின் சேவையை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும். அதுவும் விரைவில் செய்ய வேண்டும். காலம் தாழ்த்தினால் சித்தமருத்துவமே செத்து மறைந்தொழியும்.

சுவிஸ் நாட்டில்!

இத்தாலிய கம்யூனிஸ்டுகள் கைது

பெர்னே, ஜுன் 1—

சுவிட்சர்லாந்தில் உள்ள 10 நகரங்களில் இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள் பலரை சுவிஸ் போலீசார் கைது செய்திருப்பதாகத் தெரிகிறது.

சுவிட்சர்லாந்தில் உள்ள இத்தாலிய காலனியில், தங்கள் பிடியை விரிவாக்கும் பொருட்டு, ரகசியக் கூட்டங்கள் நடத்தவும், ஒரு அரசியல் செய்தி இலாகா ஏற்படுத்தவும், கம்யூனிஸ்டுகள் முயற்சித்ததாக சுவிஸ் சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறதாம்.

பஞ்சாப் அரசாங்கத்தின் அடக்குமுறை!

மொழிவழிக் கிளர்ச்சியை விரிவாக்குகிறது!

கிராமத்தோறும் கிளர்ச்சி செய்ய அகாலியர் ஏற்பாடு

ஜலந்தர், மே 30—

'சீக்கிய நாடு, சீக்கியருக்கே' என்ற மூல முழக்கத்தை உள்ளடக்கியது என வர்ணிக்கப்படும் மொழிவழி மாநிலக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அகாலிதளத்தவர், அமிர்தசரசில் மட்டுமின்றி, பஞ்சாப் மாநிலத்தின் இதர நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் தாங்கள் இப்போது நடத்திவரும் 'உரிமைக் குரல்' எழுப்ப விதிக்கப்பட்டுள்ள தடையை மீறும் கிளர்ச்சிக்கு 'ஆதரவு திரட்டும் நோக்குடன் கிளர்ச்சியை விரிவுபடுத்த திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே, ஜலந்தர், பெரோஸ்பூர், அமிர்தசரஸ் ஆகிய மாவட்டத்தில் உள்ள நகரங்களில் ஆதரவுக் கிளர்ச்சி துவக்கப்பட்டுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

அரசாங்கம், கிளர்ச்சி விரிவுபடுத்தப்படுமானால், கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கிராமந்தோறும், 'பஞ்சாப் மொழி மாநிலம் வேண்டும்' என குரல் எழுப்புவதை, தடை செய்யும் சட்டத்தை அமுல் செய்வது மிகக் கடினமாயிருக்குமென்றும், இப்போதுள்ள போலீஸ் படை, விரிவுபடுத்தப்படும் கிளர்ச்சியை சமாளிக்க முடியாதென அஞ்சப்படுவதாகவும் தெரியவருகிறது.

வியட்நாம் பற்றி ஜினிவா ஒப்பந்தம்

அகதிகள் இடம் மாறுவதற்கான காலவரை நீடிக்கிறது

தேர்தல் பற்றி மேற்பார்வைக் குழு தலைவர் விளக்கம்

சைகோன், மே 31—

வியட்நாம் அகதிகள் இடம் பெயர்ந்து குடியேறிக் கொள்வதற்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த காலவரையறையை நீடித்துக் கொள்வதற்கு வட வியட்நாம் அரசாங்கமும், பிரெஞ்சு தலைமைப் பீடமும் கொள்கையளவில் ஒப்புதல் தந்துவிட்டதாக வியட்நாமில் உள்ள சர்வதேச மேற்பார்வைக் குழு தெரிவித்திருக்கிறது.

வரும் ஜுலை 20-ந் தேதி வரை ஒரு பகுதியில் உள்ளவர் மறு பகுதி செல்லும் காலம் நீடிக்கப்பட்டிருக்கிறதாம்.

முதலில் 300 நாள் தரப்பட்டிருந்த தவணை கடந்த மே 18-ந் தேதியுடன் முடிவடைந்தது.

இருதரப்புடனும் விவாதித்து, இந்த ஒப்புதலை அமுல் நடத்துவதற்கான வழிவகைகள் ஆராயப்படுவதாக, குழுவின் தலைவரான எம். ஜே தேசாய், குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த மே 18-ந் தேதி வரை சுமார் 7 லட்சம் பேர் வட வியட்நாமிலிருந்து தென் வியட்நாம் வந்து குடியேறியுள்ளதாகவும் கூறப்பட்டது.

வியட்நாமை ஒன்றுபடுத்துவதற்கென பொதுத் தேர்தல் நடத்தவேண்டும் என்று ஜினிவா ஒப்பந்தத்தில் காணப்படும் விதியினை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் பற்றி, தேசாய் கேட்கப்பட்டபோது, அவர், இருதரப்பினரையும் தேர்தல் நடத்துமாறு நிர்ப்பந்திப்பது தனது குழுவின் கடமையல்லவென்றும், ஆனாலும், இரு தரப்பாரும் ஜுலை 1-ந் தேதியன்று தேர்தல் நடத்துவது பற்றி கலந்து பேசவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

ஜினிவா ஒப்பந்தத்தினை, தென் வியட்நாமியர் இன்னும் அங்கீகரித்த பாடில்லை.

இத்தாலிய ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் முடிவுற்றது

ரோம், ஜுன் 1—

இத்தாலிய நாட்டில் உள்ள செகண்டரி பள்ளி ஆசிரியர்கள் 52,000 பேர், சம்பள உயர்வு கோரி மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தத்தை முடித்துக் கொண்டனர் என்று தெரிகிறது.

ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தால் மகிழ்ந்திருந்த சுமார் 10 லட்சம் மாணவர்கள், நாளையதினம் பள்ளிகள் திறக்கப்பட்டு, தங்களுக்குப் பரீட்சை நடைபெறும் எனக் கேட்டு வருந்தினர் எனத் தெரிகிறது!

மொராக்கோவில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

காசபிளாங்கா, ஜுன் 1—

மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும் மீண்டும் ஒரு நாள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 10 பேர் கொல்லப்பட்டதாகவும், 10 பேர் படுகாயமுற்றதாகவும் கூறப்படுகிறது.

அல்ஜீரியாவில், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பிரெஞ்சுப் படைகளுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது.

250 வாக்காளரில் இருவர் வீதம் மட்டுமே வாக்களித்தனர்!

ரத்னகிரி மாவட்டக்கழகத் தேர்தலில் விசித்திரம்

இரத்னகிரி, மே 31—

நேற்றுடன் முடிவுற்ற இரத்னகிரி மாவட்டக் கழகத் தேர்தலில், ஒரு தொகுதியில் 250 வாக்காளர்களுக்கு 2 வாக்காளர்கள் வீதமே வாக்களித்திருப்பதாகத் தகவல் எட்டியுள்ளது.

எல்லாதொகுதிகளிலுமே பொதுவாக 20 சதவிகித வாக்குகள் மட்டுமே பதிவாயினவாம்.

இதற்குக் காரணம் குடியானவர்கள், எதிர்நோக்கியிருக்கும் பட்டத்தில், விவசாயத்திற்காக நிலங்களைப் பண்படுத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததே என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே இந்த மாவட்டக் கழகம், இதனாலேயே, தேர்தலை ஆறு மாதங்களுக்கு ஒத்திப்போடுமாறு கோரியதாகவும், ஆனால், அந்தக் கோரிக்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

தேர்தலில் ஈடுபட்ட இருபெரும் கட்சிகளான, 'காங்கிரஸ்', 'ஜனதா அசாதி' ஆகியவை, தங்கள் தங்கள் கட்சிக்கே பெருவாரியான வாக்குகள் பதிவாகியிருப்பதாயும் தாங்களே வெற்றி பெறுவர் என்றும் கூறிக்கொள்கின்றனவாம்.

ஐந்து குழந்தைகளின் அன்னை

பள்ளி இறுதி வகுப்புப் பரிட்சையில் தேர்வு!

பம்பாய் மாநிலத்தில் பள்ளி இறுதி வகுப்பு பரீட்சையில் தேறியுள்ள 46,000 பேரில் 5 குழந்தைகட்கு அன்னையாயிருக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்மணியும் ஒருவர் என்று தெரிய வருகிறது.

திருமதி சகுந்தலா சிந்தாமண் சால்வே என்ற அந்தப் பெண்மணி பல வருடங்களாக தினமும் பின் இரவில் இரண்டொரு மணி நேரம் கல்வி பயின்று, தனிப்பட்ட முறையில் பரீட்சை எழுதி, தேர்வு பெற்றதாக தெரிவித்திருக்கிறாராம்!

கப்பல்கட்டண உயர்வு

பம்பாய், ஜுன் 1—

மே 31-ந் தேதிக்குள் கப்பல்களில் சாமான்கள் ஏற்றி இறக்கும் வேலை கல்கத்தாவிலும் பம்பாயிலும் சரியாகாவிட்டால், கட்டணத்தை உயர்த்தப் போவதாக, கப்பல் கம்பெனிகள் அறிவித்திருந்தபடி, இன்று கட்டண உயர்வான 'சர் சார்ஜ்' விதிக்கப்படவில்லை.

ஜுன் 14-ந் தேதி வரை இந்த முடிவை ஒத்திவைப்பதென சில கப்பல் கம்பெனிகள் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

துருக்கி-ஈராக் ஒப்பந்தம்!

பாகிஸ்தான் பங்கு பெறும்?

கராச்சி, ஜுன் 1—

துருக்கி - ஈராக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் சேரக்கூடும் என்ற செய்திகளை, உறுதிப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் வெரு விவகார இலாகாவின், கொள்கையில் மாற்றம் தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்திய இன்ஷ்யூரன்ஸ் — சில விவரங்கள்

இந்திய பொது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் வருடாந்திர பிரிமிய வருமானம், 1931-ல் ரூ 60 இலட்சமாகவும், 1941ல் ரூ 151 இலட்சமாகவும், 1953-ல் ரூ. 676 இலட்சமாகவும் இருந்தது; இக் கம்பெனிகள் இந்தியாவுக்கு வெளியேயும் அலுவல்களை விரிவாக்கினர்; இத்துறையில், அவைகளுக்குக் கிடைத்த வருமானம் 1931-ல் ரூ. 99 இலட்சமாக இருந்தது—1953-ல். ரூ. 829 இலட்சமாக உயர்ந்துவிட்டது.

வடவர் நம் பொருளை வாங்குவதில்லை

ஆனால் தென்னகம் சந்தையாக்கப்பட்டுள்ளது

ஆச்சாரியார் உணர்ந்த உண்மையை இதர பார்ப்பனரும் உணர வேண்டும்

பொத்தனூரில் தோழர் க. அன்பழகன் விளக்கம்

"இங்கு வெற்றிலைக் கொடிக்கால், ஒருவித நோயால் பாதிக்கப்பட்டு, அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது, தோழர் சண்முகம், திருச்சிப் பொதுக் குழுவில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்களைக் கண்டு மக்களின் அவல நிலையை எடுத்தியம்பினர். அதன்படி தோழர் கோவிந்தசாமியும் மற்றும் சில சட்டசபை உறுப்பினர்களும் அமைச்சர்களைக் கண்டு அறிவித்தார்கள். ஆனால், அரசியலார் அக்கரை காட்டாமல் கண் துடைப்பு வேலை செய்தனர்—' பாதி விலைக்கு மருந்து தருகிறோம்; வாங்கித் தூவுங்கள்; நோய் நீங்கிவிடும்' எனக் கூறினர். வெற்றிலைப் பயிருக்கு எதனால் நோய் உண்டாகிறது? அதனைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?—என்ற நல்லெண்ணம் அவர்களுக்கு உண்டாகவில்லை. கண்துடைப்பு வேலை செய்வதில் காங்கிரஸ்காரர்கள் கைதேர்ந்தவர்கள்."

"நான் சென்ற முறை திருச்செங்கோடு வந்திருந்தபொழுது சங்கிரி ரயில்வே நிலையத்தில் நிறைய வெற்றிலைக் கூடைகள் அடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அருகில் இருந்தவரை, 'இவைகள் எங்கு உற்பத்தி செய்யப்பட்டு இங்கு வருகின்றன' என்று கேட்டபொழுது, 'இவைகள் பொத்தனூர் வட்டாரத்திலிருந்து இங்கு வருகின்றன; இங்குள்ள வடவர்கள் பம்பாய்க்கு ஏற்றுமதி செய்கின்றனர்,' என்று கூறி அங்குள்ள வடவர்களைக் காண்பித்தார். நாம்தான் வெற்றிலைப் பயிருக்கு எல்லா வேலைகளையும் செய்கிறோம். ஆனால், வெற்றிலையைப் பம்பாய்க்கு அனுப்புவதற்கு வடவர் 'உதவி' தேவைப்படுகிறது. பம்பாய்க்கு நாம் நேரிடையாக அனுப்பினால், வடநாட்டினர் தங்களது 'மார்க்கெட்'டில் இடம் தருவதில்லை. ஆதலால் நாம் அவர்களின் உதவியைக்கொண்டுதான் வியாபாரம் செய்ய முடிகிறது ஆனால், நாம் பம்பாய்க்காரன் நெய்கின்ற துணியை விற்பனை செய்து தருகின்றோம்; ஆமதாபாத் மல், ஷோலாப்பூர் வேட்டி முதலியவற்றிற்கு நிறைந்த பொருள் கொடுத்தும் வாங்கத் தயாராக உள்ளோம். ஆனால், வடநாட்டார் தென்னாட்டில் தயாரித்த பொருளை வாங்குவதில்லை."

"நாம் விளைந்த பொருளைத் தாலாம். அவன் விளைந்த பொருளைக்கொண்டு செயற்கைப் பொருள்களாக மாற்றி நம்மிடையே விற்று பெரும் லாபம் சம்பாதிக்கிறான். வடவர் தென்னாட்டை தனது பொருள்களுக்கு 'மார்க்கெட்'டாகப் பயன்படுத்துகின்றனர்."

"இம்மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலையில் பாக்சைட் கிடைக்கிறது; மாங்கனீஸ் கிடைக்கிறது. இவற்றை எடுத்து ஜப்பானுக்கு அனுப்ப வடநாட்டுக் கம்பெனிக்கு உரிமை. அதனால் கிடைக்கும் லாபம் வடநாட்டாருக்கு. தென்னாற்காடு மாவட்டத்தில் நிலக்கரி உள்ளது; அதனை எடுக்க வடநாட்டு சர்க்காருக்கு உரிமை. கிடைக்கும் லாபத்தில் ¾ பங்கு வடநாட்டு சர்க்காருக்கு. ¼ பாகம் சென்னை அரசியலாருக்கு. மைசூரில் உள்ள கோலாரில் உள்ள தங்கத்தை எடுக்க வெளிநாட்டுக் கம்பெனிக்கு உரிமை; லாபம் வெளிநாட்டுக் கம்பெனிக்கு. நம் நாட்டுப் பொருளுக்கு வெளிநாட்டு 'மார்க்கெட்' பிடிக்கும் உரிமை வடநாட்டாருக்கே. இது எவ்வாறு நியாயமுடையதாகும்? தென்னாட்டவருக்கு இதனால் இலாபமா? நஷ்டமா?"

—என்று 25—5—55 புதன் மாலை பொத்தனூர் (சேலம் மாவட்டம்) திரு. வி. க. திடலில், தோழர் க. சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் குறிப்பிட்டார்.

தலைவர், தி. மு. கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும், அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் பேசினர். தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக சங்கத் தலைவர் தோழர் ஓ. எம். கந்தசாமி கைத்தறி ஆடை ஒன்றைப் போர்த்தினர்.

கூட்டத்தில், தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், இரா. சகநாதன், இரா. சண்முகம் ஆகியோரும் பேசினர்.

தோழர் அன்பழகன் தொடர்ந்து பேசியதாவது:—

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆச்சாரியார் ஒரு 'இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி'யில் பேசும்பொழுது 'வடவர் தென்னாட்டைக் கவனிப்பதில்லை. நான் பசு மாட்டுக்குத் தீனி வைக்கிறேன்; வடநாட்டார் பால் கறந்து செல்கின்றனர்' என்று கூறினர். இன்றுதான் சில பார்ப்பனர்களுக்குத் தென்னாட்டைப் பற்றி எண்ணம் உண்டாகியிருக்கிறது. ஆச்சாரியார் உணர்ந்த அளவு மற்ற பார்ப்பனர்களும் உணரவேண்டும்."

★

பாபநாசம்

பாபநாசம் தி. மு. கழகச் சார்பில் 28—5—55 சனி மாலை மாபெரும் பொதுக் கூட்டம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. கூட்டத்திற்கு தஞ்சை தோழர் ஏ. வி. பதி தலைமை வகித்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர்கள் எஸ். ஆர். ராதா, கோ. நாராயணசாமி, மாயவரம் என். கிட்டப்பா பேசியபின், இறுதியில் தோழர் க. அன்பழகன் விரிவுரையாற்றினர்.

குடந்தை

குடந்தை திக்காம்பாளையத் தெரு "திருக்குறள் படிப்பகத்தின் நான்காவது ஆண்டு விழா 29—5—55 காலை 9 மணிக்கு, ராஜகோபால் நாடக தியேட்டரில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குத் தோழர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். தோழர்கள் வீரா. இராசகோபால், அண்ணல் பதி, எஸ். பி. குமாரசாமி ஆகியோர் பேசினர். பல சிறுவர்கள் திருக்குறள் பாக்களை ஒப்புவித்து பரிசுகள் பெற்றனர். மாலை 5 மணியளவுக்கு மீண்டும் விழா துவங்கியபோது தோழர் எஸ் பி குமாரசாமி தலைமை வகித்து உரையாற்றினர். அடுத்துத் தோழர் வீரா இராசகோபால் பேசியபின், வரவேற்புரையும் ஆண்டு அறிக்கையும் செயலாளரால் வாசிக்கப்பட்டபின், தோழர்கள் வீரசாமி, முருகையன் பேசினர். அடுத்து க. அன்பழகன் குறளைப் பற்றியும், இலக்கியங்களை குறளுடன் ஒப்பிட்டும் அரியதோர் உரை ஆற்றினர். விழாவில் தி. மு. கழக மாநில மாநாட்டிற்காக ரூ. 9—12—9 நிதி திரட்டப்பட்டது.

'கைதிகளை விடுதலை செய்க'

அமெரிக்கா பெய்ஜிங்கை நேரடியாகக் கேட்கிறது

வாஷிங்டன், ஜூன் 1—

சீனாவில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 52 அமெரிக்கர்களை விடுதலை செய்யுமாறு அமெரிக்க சர்க்கார் செஞ்சீன சர்க்காரை நேரடியாகக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

மற்றும் 11 அமெரிக்க ராணுவத்தினர் சீனாவில் இருப்பதாகவும் அவர்களைப் பற்றித் தகவல் தெரிவிக்குமாறும் அமெரிக்க சர்க்கார் கேட்டுள்ளதாம்.

சிங்கள நாகரீகத் தோற்றம்

கோத்தலாவலைதரும் வரலாறு

கொழும்பு, ஜூன் 1—

"2,500 ஆண்டுகளுக்கு முன் 'விஜயா' என்ற மன்னர், இலங்கையில் குடிபுகுந்தது முதல் சிங்களவரின் சரித்திரம் துவங்குகிறது அவர்தான் முதன் முதலில் இந்தியாவிலிருந்து இலங்கையில் 'கன்னத்தனமாகக் குடியேறியவர்,'" என்று, இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

புதியதாக வந்துள்ள இந்தியத் தூதுவர் சக்ரவர்த்தியின் ஒத்துழைப்பைக் கோரி, கூட்டமொன்றில் பேசிய அவர், "நீங்கள் வங்க மாநிலத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். அந்த வங்கத்திலிருந்துதான் 'விஜயா' என்ற மன்னர் இலங்கைக்கு வந்தார். அவர் தன்னுடன் 500 பேர்களையும் கூட்டிவந்து சிங்கள நாகரீகத்தினைத் துவக்கி வைத்தார்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மணந்துகொண்டு மறைந்துவிடுதல்!

பணம் பறிக்க மங்கையர் புது வழி

ஆதிவாசிகள் பலர் ஏமாந்தனர்!

ரட்லம், மே 31—

நாணிக் கோணிக் கொண்டும், நடுங்கிக் கொண்டும், ஆர்வமுள்ள ஆதிவாசி இளைஞர்களைத் திருமணம் செய்து கொள்வது; பிறகு அவர்களைத் தவிக்க விட்டுவிட்டு ஓடிப்போய் விடுவது — இப்படிப் பல சம்பவங்கள் இங்கு நடைபெறுகின்றனவாம்.

புதியதாக திருமணம் செய்து கொண்டு, 'மனைவி'யரைப் பறிகொடுத்த பல இளைஞர்களுக்கு திடீர் திடீரென தங்கள் மனைவியர் காணாமல் போய்விடுவது சந்தேகத்தைத் தந்ததாம்.

சந்தேகத்துடன் கோபமும் சேர்ந்துகொண்டதாம் அவர்களிடம்.

ஏனெனில், அந்தப் பெண்களை மணந்துகொள்வதற்காக, பெண்களைக் கொண்டுவந்து காட்டிய நபர்களுக்கு அவர்கள் பணம் வேறு அல்லவா தந்திருக்கின்றனர்?

போலீசாருக்கு புகார் செய்யப்பட்டது இது பற்றி. அதன் பேரில் அவர்கள், ஒரு பெண் உட்பட 5 பேர்களை இந்த 'மணம் செய்துகொண்டு மறைந்துவிடும் விளையாட்டில்' ஈடுபட்டனர் எனச் சந்தேகித்துக் கைது செய்திருக்கின்றனராம்!

மாநிலபுனரமைப்புகுழு

மூன்று மாதங்களில் தாக்கலாகும்

போபால், ஜூன் 1—

மாநில புனரமைப்புக் குழுவினர், தங்கள் அறிக்கையை ஜூன் மாதத்தில் தாக்கல் செய்வதாயிருந்தது. குழுவினர், மூன்று மாத அதிக தவணை கேட்டிருப்பதை ஒட்டி, செப்டம்பர் திங்களில் குழுவின் அறிக்கை தாக்கலாகும். எப்படியும், இதற்குப் பின்னும் தாமதமேற்படாது என்று, இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

அறிக்கையை ஏற்று அமுல் செய்யும் பொறுப்பு, மக்கள் சபையையும், சர்க்காரையும் சேர்ந்ததாகும் என்றும், அறிக்கையில் காணப்படும் சிபாரிசுகளை பரிசீலனை செய்வதில் பொதுமக்கள் கருத்திற்கும் தகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் உற்பத்திச் சாலையின் உற்பத்தி லட்சிய அளவு ஆரம்பத்தில் ஆண்டுக்கு 120 எஞ்சினாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது, சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்புத் திட்டத்தின் பலனாக 200 எஞ்சினாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

கழகச் செய்திகள்

சென்னை (8-வது வட்ட) தி. மு. கழகம்

29—5—55 காலை 8-30 மணிக்கு, 28, முத்துகிருட்டினன் தெருவிலுள்ள இல்லத்தில், தோழர் சோ. சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும், அரும்பெரும் பணியாற்றிய அண்ணா அவர்களைப் பாராட்டியும், சென்னை மாவட்ட செயலாளர் தோழர் இளம்பரிதியை வரவேற்றும், முன்னாள் செயலாளராகிய தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களை பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சூளேசுவரன்பட்டி தி. மு. கழகம்

29—5—55 ஞாயிறு இரவு 7 மணியளவில் கழகக் கட்டிடத்தில் செயலாளர் தோழர் கா. ராமசாமி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. புதிய செயலாளர் வசம் கழகச் சொத்துக்களையும் பாரதிதாசன் படிப்பக சொத்துக்களையும் ஒப்படைக்கப்பட்டது. பாரதிதாசன் படிப்பகத்தின் நிர்வாகிகளாக தோழர்கள் அ. அழகிரிசாமி, எஸ். ஆர். மூர்த்தி, க. ராமசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிந்தாமணி தி. மு. கழகம்

29—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சிந்தாமணி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகக் கட்டிடத்தில், திருச்சி மாவட்ட துணைச் செயலாளர் ஜி. பராங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் படிப்பகம், நூல் நிலையம் இவற்றின் விதிகளும் சட்ட திட்டங்களும் முடிவு செய்யப்பட்டன.

சென்னிமலை (கிளை) தி. மு. கழகம்

28—5—55 சனிக்கிழமை கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 14—5—55ல் நடந்த என். வி. நடராசன் (மே விழா) கூட்டத்திற்கு வரவு 143—12—0; செலவு 101—14—9 ஆனதை படித்து ஒத்துக்கொள்ளப்பட்டும், சென்னிமலை பிரசவ விடுதிக்கு பொருளுதவி தந்த திரு. ப. முத்துசாமி அவர்களை பாராட்டியும், சேலம் மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் அன்னையார் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருத்தம் தெரிவித்தும், கழக உறுப்பினர் கி. சின்னப்பன், தன் திருமண நினைவாக கழகத்திற்கு அன்பளிப்பாக ரூ. 10 அளித்ததை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அன்னாருக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காரைக்குடி (கிளை) தி. மு. கழகம்

29—5—55ல், இர்கசர் காந்தி சதுக்கத்தில் தோழர் சு. முத்துராமன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இதயமணி, நாகப்பன், கண்ணதாசன் ஆகியோர் கழகத்தின் கொள்கைகளை விளக்கிப் பேசினர்கள். அண்மையில் சென்னையில் நடந்த பொதுக்குழுவில் இரா. நெடுஞ்செழியன் அவர்களை தி. மு. கழக பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தமைக்கு பாராட்டியும், தென்னாட்டைப் புறக்கணித்து, வடநாடு வளரும் வகையில் அமைந்துள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆலந்தூர் தி. மு. கழகம்

28—5—55 இரவு 9 மணிக்கு நடந்த செயற்குழு கூட்டத்தில், 5—4—55-ல் செயற்குழு உறுப்பினர் தோழர் மணவாளன் அனுப்பிய விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களைப் பாராட்டியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், கழக இலவச படிப்பகம் நடத்துவதற்காக நிதி திரட்டுவதற்கு சென்னை மாவட்ட செயலாளருடன் ஆலந்தூர் தி. மு. கழக செயலாளர் தொடர்பு கொண்டு ஒரு நிதிக் கூட்டம் நடத்தக் கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கரூர் 15-வது வார்டு தி. மு. கழகம்

29—5—55ல், தி. மு. கழகச் செயற்குழு அவசரக் கூட்டம் செயலாளர் தோழர் சா. சுப்பராயலு தலைமையில் இரவு 8 மணிக்கு பிள்ளை கடையில் நடைபெற்றது. அதுபோது, மாநில மாநாட்டிற்கு நிதிவசூலித்து கொடுப்பதெனவும், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைப் பாராட்டியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், செயற்குழு பெரும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டது. துணைச் செயலாளர் வி. ஆர். பிச்சைகனி கூறினர்.

செண்டங்காடு தி. மு. க.

25—5—55 இரவு 8 மணிக்கு கழக செயற்குழு கூட்டம் செயலாளர் அ. சனகசபை தலைமையில் நடைபெற்றபோது, 12—6—55ல் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் சில முடிவுகளும் செய்யப்பட்டன.

இலஞ்சம் வாங்கிய இராணுவ அதிகாரிகள்

கைது செய்யும் ஏற்பாடுகள் முடிந்தனவாம்!

விலையுயர்ந்த சாமான்கள் பறிமுதல்

எர்ணுகுளம், ஜுன் 1—

தென்பகுதி இராணுவத் தலைமைக்குட்பட்ட வெலிங்டனில் உள்ள இராணுவ 'எஞ்சினீயரிங் சர்வீஸ்' அதிகாரிகள் பலர்மீது இலஞ்சம் வாங்கியதாகவும், மோசடி செய்ததாகவும், சட்டவிரோதமாக 'அன்பளிப்புகள்' பெற்றுக் கொண்டதாகவும் கூறப்பட்ட புகார்கள் பற்றி இந்திய அரசாங்க தனி போலீஸ் நிறுவனத்தார் விசாரணை நடத்தி, அந்தக் குற்றங்களுக்கு ஆளாகியுள்ள அதிகாரிகளைக் கைது செய்யும் ஏற்பாடுகளை முடித்துவிட்டதாக இங்கு தெரிய வந்துள்ளது.

15 அதிகாரிகள் மாத்திரமின்றி, சில 'கண்டிராக்டர்'களும் இந்த வழக்கில் ஈடுபட்டுள்ளனராம்.

குளிர்ப் பதனச் சாதனங்கள், விலையுயர்ந்த மரச் சாமான்கள் முதலியவற்றை அவர்களிடமிருந்து போலீசார் பறிமுதல் செய்திருப்பதுடன், சொத்துக்கள் வாங்கியது, பாங்கி இருப்புத் தொகை பற்றிய விபரங்களையும் சேகரித்திருக்கின்றனராம்.

இலஞ்சக் குற்றம் புரிந்த இந்த அதிகாரிகள், தனியாக உருவாக்கப்படும் நீதி மன்றம் ஒன்றில் விசாரிக்கப்படுவர் என்றும் தெரியவருகிறது.

எதிரொலி கேட்கிறது!

சோவியத் தலைவர்கள் பெல்கிரேட் வருகையின் விளைவா?

யூகோ நாட்டின் அதிபர் டிட்டோவை, சோவியத் தலைவர்கள் சந்தித்துப் பேசியதையொட்டி, யூகோஸ்லேவியாவுடன் மூன்று வல்லரசுகள் முதன்முதலாக சர்வதேச முறையில் மாநாடு கூடி பேசப்படுவதாகவும், கூடிய விரைவில், பெல்கிரேடில் இம்மாநாடு நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

ஆப்பிரிக்க மாணவர்கள் சினிமாவிலிருந்து வெளியேற்றம்!

'ஏகாதிபத்திய பிரச்சாரம்-திரித்துக் கூறப்பட்ட கருத்துக்களடங்கியது'

'மொகாம்பூ' என்ற சினிமா படம் பற்றி கண்டனம்

உதகை, ஜுன் 1—

ஆப்பிரிக்கர்ன் வாழ்க்கையைப் பற்றித் திரித்தும், குற்றமுள்ள வகையிலும் கூறுகிற பகுதிகளைக்கொண்ட 'மோகாம்பூ' என்ற சினிமாப் படத்தைக் கண்டிக்கும் வகையில், ஒரு பெண் உள்பட 20 ஆப்பிரிக்க மாணவர்கள், அந்த சினிமா காட்டப்படும் தியேட்டரிலிருந்து வெளிநடப்பு செய்தனர் என்று தெரியவருகிறது.

கலாச்சார உறவுக்கான இந்தியக் கவுன்சில் இங்கு நடத்தும் கோடை கால முகாமில் அந்த ஆப்பிரிக்க மாணவர்கள் பங்கு பெற்றிருக்கின்றனர்.

"ஆப்பிரிக்கர்கள் இன்னும் நாகரீகமற்றவர்களாகவே இருக்கின்றனர்,' என்று உலகுக்குக் கூறுவதற்காக, ஏகாதிபத்தியவாதிகள் நடத்தும் பிரச்சாரம்தான், இல்லாத நிலைமைகளை இருப்பதாகவும், உள்ள நிலைமைகளை திரித்தும்கூறும் அந்த சினிமாக் கட்சிகள் என்று அந்த மாணவர்கள் கூறுகின்றனர்.

"இந்த படத்தைத் தயாரித்தவர்கள், குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள வேகமான முன்னேற்றம் குறித்தும், பொதுவாக நாட்டின் நிலை குறித்த நேர்மை நோக்கையும் படத்தில் காட்டத் தவறிவிட்டிருக்கிறார்கள்; 'இந்திய—ஆப்பிரிக்க மக்களிடையே நல்லுறவு வளர வேண்டும்,' என்பது மட்டுமின்றி, "ஆப்பிரிக்கமக்கள் காலனி ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட வேண்டுவதற்கும் ஒத்துழைக்கும், இந்திய அரசாங்க அதிகாரிகள், எப்படி இத்தகைய படங்கள் இங்கு மக்களுக்கு காட்டப்படுவதை அனுமதித்தார்கள் என்பது தங்களுக்கு ஆச்சரியத்தைத் தருவதாயும்" அந்த ஆப்பிரிக்க மாணவர்கள் கூறியிருக்கின்றனர்.

'இத்தகைய படங்கள் இந்தியாவில் திரையிடப்பட அனுமதிக்கக் கூடாது,' என்றும் அவர்கள் கூறினராம்.

சுமார் 220 ஆப்பிரிக்க மாணவர்களுக்கான ஆப்பிரிக்க மாணவர் சங்கம், 'அரசன் சாலமனின் சுரங்கம்,' 'ஜான்சிபாருக்கு மேற்கே,' 'கிளிமாஞ்சரோ பனி மலைகள்' போன்ற படங்களைக் கண்டித்து அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக, பெருத்த ஆரவாரத்திற்கிடையே பொதுச் செயலாளர் அவர்கள் பேச எழுந்தவுடன் மலர் மாலைகளும், வாழ்த்துரையும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன. பொதுச் செயலாளர் திராவிடரின் பெருமையையும், தமிழரின் நல்வாழ்வு சிதைந்துள்ளது எப்படி என்பதையும் நீண்ட நேரம் விளக்கிப் பேசினர்.

கீழ்க்கண்ட கிளைக் கழகங்கள் கைத்தறி ஆடைகள் அணிவித்தன:—

ம. மேலவன்னியூர், பழையநல்லூர், புவனகிரி, பூலாமேடு, கிரப்பாளையம், லால்பேட்டை, அண்ணாமலை நகர், பரங்கிப்பேட்டை, முட்லூர், வல்லம்படுகை; கோதண்டவிளாகம் ரூ 2; செவ்வாயம், ஆதிவராகநத்தம், ஆதிவராகநல்லூர், பெருமாத்தூர் நாகப்பன் தி. மு. கழகம், வத்திராயனதெத்து, தையாகுப்பம், காட்டுமன்னார்கோயில்.

எவரும் ஏறியிராத உயர மலைச் சிகரம்!

பிரிட்டிஷ் குழுவினர் வெற்றி!

டாக்டர் சார்லஸ் ஈவான்ஸ் தலைமையில் சென்ற பிரிட்டிஷ் இமாலயக் குழு, 28,146 அடி உயரமுள்ள காஞ்சன் கங்கா மலைச் சிகரத்தை ஏறிவிட்டனர். உலகத்தில் எவரும் இதுவரை ஏறியிராத மலைச் சிகரங்களுக்குள் இது உயரமானதாகும். இச்சிகரத்தை எட்டுவது, எவரெஸ்ட் சிகரத்தை அடைவதைவிடக் கடினமானதாகும் என்று கூறப்படுகிறது.

****

மாநில மாநாட்டு நிதிக்காக சென்னையில் சிறப்புச் சொற்பொழிவு

"சென்னை மாவட்ட தி. மு. கழகம், மாநில மாநாட்டிற்கு நிதி திரட்டும்பொருட்டு, இரண்டாவதாக ஒரு சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் ஏற்பாடு செய்துள்ளது.

"5—6—55 காலை 10 மணியளவில், சென்னை கோகலே மண்டபத்தில், தோழர் கே. ஆர். இராமசாமி தலைமையில, தோழர் ஈ. வெ. கி. சம்பத் 'மக்களும்-ஆட்சியும்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார்.

"முதற் கூட்டத்திற்கு தோழர்கள் காட்டிய பேராதரவினை இந்தக் கூட்டத்திற்கும் தந்து, மாநில மாநாட்டு நிதி வசூலை முடித்துத் தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

"நன்கொடை ரூ. 1, அணா 8 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

****

கழகக் கூட்டங்கள்

✶

சென்னை (3-வது வட்டம்)
கே. எஸ். பாண்டியன திடலில்
(கல்லறை மைதானம்)
4—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: த. சேதுராமன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். வி. நடராசன்
விருதை ந. இராமசாமி
இசை: இரா சண்முகம்

குறிப்பு: 21—5—55 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அன்று அவர்களின் சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்.

★

வலங்கைமான்
கடைத்தெரு அருகில்
5—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். பத்மநாபன்
பேசுபவர்:
தாமரைச்செல்வன்

✶

கிழ்வழித்துனையாங்குப்பம்

5—6—55 மாலை 6 மணிக்கு சந்தைவெளியில், தோழர் கே. ஜி இராஜன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ. மணிஎழிலன், வே. அ இளஞ்செழியன், தோழியர் தேசியமணி ஆகியோர் பேசுவர்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜுன் 4: சென்னை [3-வது வட்ட திமுகழகப் பொதுக்கூட்டம்]
5: காலை—எரிப்பாக்கம் [திருமணம்]
மாலை—சென்னை [அமைந்தகரை வரி செலுத்துவோர் சங்கப் பொதுக் கூட்டம்]
6: திருவிடமருதூர்
7: காட்டுச்சேரி
9: முத்துப்பேட்டை
10: மேலவாழக்கரை
காலை: திருமணம்
மாலை: பொதுக் கூட்டம்
12: கடலூர்
24: கொடுங்கையூர் [சென்னை மூலக் கடை வட்டம்]

கொடுங்கையூர் தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

5—6—55 பகல் 2 மணிக்கு, கொடுங்கையூர் தி மு. கழகப் பணிமனையில், கொடுங்கையூர் தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பொன்னேரி வட்டக் கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

5—6—55 காலை 10 மணிக்கு ஆரணி தி. மு. கழக அலுவலகத்தில், பொன்னேரி வட்ட தி. மு கழகச் செயற் குழு கூடும் பொருள்: மாநில மாநாட்டு நிதி கழகப் பணி.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் அமைப்புக் குழு தோழர்கட்கு

5—6—55 காலை 10 மணிக்கு, கோவை இராமனுதபுரம் தி. மு கழகக் கட்டிடத்தில், கோவை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு, அடுத்த செயற் குழு, தொழிற் சங்கத் திறப்பு விழா, முழு நேர ஊழியர் ஆகிய பிரச்சினைகள் குறித்து முடிவு செய்யப்படும். கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். வ இராசமாணிக்கம் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்.

பொதுக்கூட்டங்கள்

5—6—55 மாலை 6 மணிக்கு, சென்னை, அமைந்தகரை, வெள்ளாளத் தெரு, (இலக்குமி தியேட்டர் எதிரில் திரு. எஸ். கிருட்டிணமூர்த்தி தலைமையில், வரி செலுத்துவோர் சங்கச் சார்பில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன், கோ. இளவரசு ஆகியோர் பேசுவர்.

* * *

5—6—55 மாலை 6 மணிக்கு, கடலூரில், கடலூர் நகர தி. மா. மு கழகத்தின் சார்பில், தோழர் சித்தார்த்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோவை-செழியன், க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

சென்னை மாநில நகரசபை வரி வசூலிப்போர் 8-வது மாநாடு

5—6—55 அன்று, மதுரை கல்லூரி கட்டிடத்தில் (திருப்பரங்குன்றம் ரஸ்தா), மேற்படி மாநாடு, திரு. பி. டி. ராஜன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும். திரு. எஸ். ராமசாமி படையாச்சி மாநாட்டைத் திறந்து வைப்பார். மற்றும் பல பிரமுகர்கள் கலந்துகொள்வர்.

இளங்கோ மன்றம் 3-ம் ஆண்டு நிறைவு விழா

5—6—55 மாலை 6 மணிக்கு, மதுரை, பாண்டிய வேளாளர் தெருவில், மேற்படி மன்றத்தின் முன்பாக நடைபெறும். தோழர்கள் எஸ் முத்து, க. அறிவழகன், பி கே. சேதுராமன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசுவர்.

எம்.எஸ்.பெரியசாமி படிப்பக 2-வது ஆண்டு விழா

5—6—55 காலை 9 மணிக்கு, மேற்படி படிப்பகத்தின் முன்னல், (பாரப்பட்டித் தெரு, விருதுநகர்) தோழர் சி. கே. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், ப கண்ணன், எஸ். ரத்தினம், எம். கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சி வகுப்பு

4—6—55 இரவு 9 மணிக்கு, எண் 1, பெரிய செட்டி தெரு. பாண்டியன் படிப்பகத்தில், 'சமுதாயம்' என்ற பொருள் குறித்து, தோழர் எஸ். நெடுமாறன் சொற்பயிற்சி வகுப்பு நடத்துவார்.

* * *

குறள் வகுப்பு

5—6—55 காலை 9 மணிக்கு, மேற்படி படிப்பகத்தில், 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்திற்கு தோழர் தி. ரா. தருமராசன் விளக்கவுரையாற்றுவார்.

குறுக்கெழுத்துப் போட்டிக் கட்டுப்பாடு

சென்னை நிதியமைச்சர் கருத்து

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த இந்திய சர்க்கார், இந்தியா முழுவதற்குமான சட்டம் செய்ய அதிகாரம் கொடுக்கும் தீர்மானத்தை, சென்னை சட்ட சபை அடுத்த மாதம் கூடும்போது கொண்டு வரப்படும் என்று தெரிகிறது.

குறுக்கெழுத்து வார்த்தைப் போட்டிகளைக் கட்டுப்படுத்த இந்திய சர்க்கார் உத்தேசிக்கும் மசோதாவில், மாதம் ஒரு போட்டிதான் நடத்தலாமென்று கட்டுப்படுத்தப்படும் என்று தெரிகிறது. போட்டிக்கான பரிசுத் தொகை மாதம் ஆயிரம் ரூபாயாகக் கட்டுப்படுத்தப்படும். இத்தொகைக்கு லைசென்சு பெறவேண்டியதில்லை.

ஆயிரம் ரூபாய்க்கு மேல் பரிசுத் தொகை கொடுப்பதாக இருந்தால், அதற்கு லைசென்சு பெறவேண்டும். லைசென்சு பெற்ற போதிலும் போட்டிப் பரிசுத் தொகை எப்பொழுதும் ரூ. 10,000-த்திற்கு மேல் இருக்கலாகாது. இத்தொகைக்கான போட்டியும் மாதம் ஒன்றுக்குமேல் இருத்தல் கூடாது.

கணக்குகள், விடை அனுப்பிய பிறகு அதில் சில கட்டுப்பாடுகள் போன்ற சிலவற்றின் விதிகளும் மசோதாவில் ஏற்படுத்தப்படும்.

சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இதுபற்றிக் கூறுகையில், தம்மைப் பொறுத்தவரையில் இந்தப் போட்டிகள் மூலம் ஒருவரது அறிவை வளர்ப்பதானுல், பரிசுத் தொகையை நூறு ரூபாயாகவே கட்டுப்படுத்தலாமென்றும், ஆனால் இதுபற்றி எல்லாம் இந்திய சர்க்காருடன் விவாதித்துத்தான் முடிவு செய்ய வேண்டியிருக்குமென்றும சொன்னர்.

ஆந்திர சட்ட சபையிலும் தீர்மானம் வருகிறது

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை இயற்றுமாறு மக்கள் சபைக்கு சிபாரிசு செய்யும் தீர்மானத்தை சட்ட சபையில் கொண்டு வருவதென ஆந்திர சர்க்கார் தீர்மானித்துவிட்டனராம்.

'மேலும் வரி விதிக்க அதிக இடமில்லை!'

வரி விசாரணைக் குழுவின் சிபார்சுகளின் பலாபலன்களை சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறதென்றும், சென்னை மாநிலத்திலுள்ள நிலைமையை உத்தேசித்தே சிபார்சுகள் பரிசீலிக்கப்படுகின்றன என்றும் சென்னை நிதி மந்திரி அறிவித்துள்ளார்.

'பல மாநிலங்களில், மேற்கொண்டும் வரி விதிப்பதற்கு இடமிருக்கிறது,' என்ற குழுவின் கருத்தைக் குறிப்பிட்டு, சென்னையைப் பொருத்தமட்டில், புது வரியை விதிப்பதற்கான வசதி மிகவும் குறைவாக உள்ளதென்பதை ஏற்கனவே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்.

வருகிறது, பார்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், அடுத்த ஆண்டு மார்ச்சு திங்களில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறதாம். இந்தத் திட்டத்தின் மூலம்—திட்டம் அமுலாகும் காலத்தில்—நாட்டின் வருமானம் கால் பங்கு அதிகரிக்குமாம்! 120 லட்சம் பேருக்கு வேலை கிடைக்குமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.